

2023 ஆம் ஆண்டிற்கான
செயற்சாதனை அறிக்கை

தேசிய பொலிஸ் ஆணைக்குழு

செலவினத் தலைப்பு இலக்கம் 08

உள்ளடக்கம்

அத்தியாயம் 1-நிறுவனத்தின் பக்கத்தோற்றம்..... 02

அத்தியாயம் 2-முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு..... 10

அத்தியாயம் 3-வருடத்தின் முழு நிதித் தொகை சாதனை..... 35

அத்தியாயம் 4-செயற்சாதனை சுட்டெண்..... 48

அத்தியாயம் 5.பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளுதலின் செயற்சாதனை..... 49

அத்தியாயம் 6. மனித வளப்பிரிவு..... 51

அத்தியாயம் 7 இணக்கப்பாட்டு அறிக்கை 52

01 அத்தியாயம்
நிறுவனப் பக்கத்தோற்றம்

1.1. அறிமுகம்

2002 ஆண்டில் 17 ஆவது அரசியல் யாப்பு மறுசிரமைப்பு ஊடாக முதல் தடவையாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினை தாபித்தன் நோக்காக அமைந்தது பொலிஸ் சேவையின் அரசியல் தலையீடுகள் அற்ற மற்றும் சுயாதீனமாக செயற்படுவதன் மூலம் வினைத்திறன்மிக்க, மக்களுக்கு உகந்த, பயன்மிக்க சேவையினை பொது மக்களுக்கு வழங்குவதாகும். இந் நோக்கத்தினை எட்டுவதற்காக பொலிஸ் சேயின் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், பதவி உயர்வு, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்ளல் மற்றும் பொலிஸாருக்கு எதிராக பொது மக்களின் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்தல் போன்ற அதிகாரங்கள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டதுஎவ்வாறெனினும் 2010 வருடத்தில் அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 18வது திருத்தத்தின் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு மட்டுமாக மட்டுப்படுத்தப்பட்டது. மீண்டும் 2015 வருடத்தில் 19வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் பொலிஸ் அதிகாரிகளை நியமித்தல்,இடமாற்றம் செய்தல் மற்றும் ஒழுக்க அதிகாரங்கள் மட்டுமின்றி பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை அதிகாரங்களும் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டன.2020 வருடத்தில் 20வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் ஆணைக்குழுவின் அதிகாங்கள் மீண்டும் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை அதிகாரங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டன.

எவ்வாறெனினும 2022 ஒக்டோபர் மாதம் 31ம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்ட 21வது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மீண்டும் முழுமையான அதிகாரங்கள் கிடைக்கப்பெற்றன. அதற்கமைய புதிய ஆணைக்குழு நிர்மாணிக்கப்படும் வரையில் 2022.10.31ம் திகதி முதல் 2023.05.15ம் திகதி வரை 20வது சீர்த்திருத்தத்தின் கீழ் அதுவரை செயற்பாட்டில் இருந்த ஆணைக்குழு நீடித்தது. அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பேரில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழு 2023 மே மாதம் 16ம் திகதி ஓய்வு பெற்ற மேல் நீதிபதி ஈ.டப்ளிவ்.எம் லலித் ஏக்கநாயக்க அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் நியமிக்கப்பட்டது. தற்போதைய பொலிஸ் ஆணைக்குழு சட்டத்துறை, நீதி, அரச பரிபாலன துறை, சமூக விஞ்ஞான துறை, முகாமைத்துவ துறை ஆகிய பல்வேறு துறைகளைச் சேர்ந்த சிறந்த,அனுபவமிக்க அங்கத்தவர்களை உள்ளடக்கியுள்ளது.

2023 மதிப்பீட்டு வருடத்தில் ஆணைக்குழு மறுசீரமைக்கப்பட்டதை தொடரந்து ஆணைக்குழுவின் நியமித்த அதிகாரங்களை வினைதிறனாகவும்,விளைதிறனாகவும் செயற்படுத்துவதற்குஅவசியமான சட்ட வியூகத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கியமான தீர்மானங்களில் ஒன்று பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவி மற்றும் அப் பதவிக்கு கீழுள்ள குறித்த பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகள் தொடர்பில் 2341.⁄.51 2023 ஜுலை 20 ம் திகதியுடைய "அதிகாரப் பகிர்வு" தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டமை ஆகும். இதன் மூலம் பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அப் பதவிக்கு கீழுள்ள பதவியுள்ள (பொலிஸ்

நிலைய பொறுப்பதிகாரிகள் செயற்பாட்டில் உள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகளைத் தவிர) குறித்த பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளை நியமித்தல்,பதவியுயர்த்துதல், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு மற்றும் சேவையை முடிவுறுத்தல் அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு மற்றும் ஏனைய சிரேஸ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு கையளிக்கப்பட்டது.அத்துடன் பொலிஸ்மா அதிபரினால் அல்லது சிரேஸ்ட அதிகாரியொருவரினால் அதிகாரங்களை நிறைவேற்றுவதில் ஏதேனும் பொலிஸ் அதிகாரியொருவர் பாதிக்கப்பட்டிருப்பின் அக் கட்டளைக்கு,தீர்மானத்திற்கு எதிராக பொலிஸ் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை அவ்வதிகாரிக்கு உண்டு. அவ்வாறான ஒரு மேன்முறையீடு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பிரசுரிக்கப்பட்ட 2345.ஃஇலக்கமும் 16.08.2023 திகதியுமுடைய ‘‘மேன்முறையீடு செய்தல் தொடர்பான விதிமுறைகள்’’ தொடர்பான வர்த்தமானி அறிவித்தலின் அறிவுறுத்தல்களுக்கமைய எழுத்து மூலம் தயார் செய்யப்பட முடியும்.

இதைத்தவிர 2345.ஃ46 இலக்கமும் 2023.08.16ம் திகதிடைய ‘‘**பொது மக்கள் முறைப்பாடுகள் பற்றிய விதிமுறைகள்**’’ பற்றிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. மேலும் அரசியலமைப்பின் 155எ(3)(அ) யாப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயற்பாட்டு சட்டதிட்டங்களை தயாரித்து வர்த்தமானியில் வெளியிடுவதற்கு தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீட்டு வருடத்தில் புதிதாக சீர்திருத்தப்பட்ட ஆணைக்குழு நியமிக்கப்பட்டு ஏறத்தாழ 07மாத காலங்கள் செயற்பட்டு அக் குறுகிய காலப்பகுதியில் பொலிஸ் சேவையினை சுயாதீன,செயற்றிறன் மிக்க மற்றும் பட்சபாதமற்ற சேவையாக மாற்றுதல் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டுள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கிடைக்கும் பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதில் பெரும்பாலான பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக எழுப்பப்படும் குற்றச்சாட்டு சமாதானம் சீர்குலைதல் மற்றும் சமாதானம் சீர்குலைவதற்கு அதிக சந்தர்ப்பமுள்ள(காணி) பிணக்குகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை ஆகும். இது தொடர்பாக ஆணைக்குழுவின் அவதானிப்புக்குட்பட்டது. எனவே அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பாக நிலையப் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் 1979 இல 44 உடைய ஆரம்ப வழக்கு கட்டளைச் சட்டத்தின் 66ம் உறுப்புரை பிரகாரம் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு விசாரணை அதிகாரிகளை நியமிக்கும் பொறுப்பை அவ்அவ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு சார்த்தப்படுவதை அறிவித்து கட்டளை வழங்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அறிவித்தல் மற்றும் அது தொடர்பான பின்னூட்டல் செயன்முறையொன்றை தயாரித்தல் என்பது அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முக்கிய தீர்மானங்களில் ஒன்றாகும். பொலிஸ் மா அதிபர் அக்கட்டளைக்கமைய செயற்பட்டு வருவது அவதானிக்கப்பட்டது

மேலும் பொலிஸ் சேவையின் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மேலதிகமாக பொதுமக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்வதில் பொலிஸ் ஆணைக்குழுவின் கடமை தொடர்பாக நாடளாவிய பொலிஸ் அதிகாரிகளை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் தற்போது திட்டமிடப்பட்டு வருகின்றன. அதற்கமைய பொலிஸ் அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டும் ஆரம்ப நிகழ்ச்சிகள் 2024ம் வருடத்தில் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களின் பங்குபற்றலோடு நடத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ஆணைக்குழுவின் வகிபாகம் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளை மட்டுமின்றி பொது மக்களையும் அறிவூட்டும் நிகழ்ச்சிகளையும் நடத்துவது தொடர்பாக ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ளது. இதற்கு தேவையான தொழிநுட்ப

மற்றும் நிதியில் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி செயற்றிட்டத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

புதிய ஆணைக்குழு செயற்பாடுகளை ஆரம்பித்த போது புதிய அதிகாரங்களை செயற்படுத்துவதற்கு அவசியமான பதவியணி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு இன்மை அவ் அதிகாரங்களை செயற்படுத்துவது தொடர்பாக காணப்பட்ட பாரிய சவாலும் தடையுமாக இருந்தது. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அத்தியாவசியமான பதவியணியை அனுமதித்துக் கொள்வதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு பல்வேறு விண்ணப்பங்களை சமர்ப்பித்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் இன்னும் எதிர்பாரத்தளவு பதவியணியை அனுமதித்துக் கொள்ள முடியாதுள்ளது. மேலும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினரில் இலங்கை நிர்வாக சேவையின் ஐஐ.ஐஐஐ தரங்களில் அனுமதிக்கப்பட்ட 11 பதவிகளில் 8ற்கு வெற்றிடம் நிலவுவதோடு உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கும் வெற்றிடம் நிலவுவதோடு முழு வெற்றிட எண்ணிக்கை 20ஆக காணப்படுகிறது. அப் பதவி வெற்றிடங்களுக்கு அதிகாரிகளை பெற்றுக் கொடுக்குமாறு பொது நிர்வாக அமைச்சுக்கும் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கும் தொடர்ந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன

இவ்வாறான வரையறுக்கப்பட்ட அலுவலர்களுடன் செயற்படும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பொலிஸ் அதிகாரிகள் தொடர்பான அதிகாரங்கள் கையிளிக்கப்பட்டமையுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அண்ணளவாக 10,000க்கும் அதிகமான கோவைகள் கையளிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக தினசரி பொது மக்களினால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் மேன்முறையீடுகள் தொடர்பான விசாரணை மற்றும் பணிகளும் ஏனைய துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இது தொடர்பாக மாண்புமிகு தவிசாளர் உள்ளிட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவர்களினால் தொடர்ச்சியாக ஆலோசனைகள் வழங்கப்பட்டு வழிகாட்டல் வழங்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக வரையறுக்கப்பட்ட இடப்பரப்பு, கணினி வசதி பற்றாக்குறை, நிதி மற்றும் பொருள் வளங்களின் குறைப்பாடு ஆகிய ஆணைக்குழு முகங்கொடுத்து வரும் சவால்களை குறைத்துக் கொள்வதற்கு தேசிய வரவு செலவு திணைக்களம் உச்சகட்ட பங்களிப்பை வழங்கியுள்ளதை நன்றியுணர்வோடு நினைவு கூறுகிறேன். **2023ம் வருடத்தில் அதாவது 2023.01.01 திகதி முதல் 2023.12.31ம் திகதி வரை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவு மற்றும் அலகுகளின் மூலம் நிறைவு செய்யப்பட்டுள்ள ஒட்டுமொத்த செயற் சாதனை மற்றும் அடையப்பட்டுள்ள தேர்ச்சி இவ் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் குறுகிய காலப்பகுதியில் பொலிஸ் சேவைக்கும், பொது மக்களுக்கும் வினைதிறனான கடமைப்பாடொன்றை நிறைவேற்றுதற்கு தேவையான நடவடிக்கைகள் இக் குறுகிய காலத்திற்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரு நாடாக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கும் இலங்கை மிகச் சிரமமான காலப்பகுதியை கடந்து வரும் சந்தர்ப்பத்தில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு உறுதியானதும், சுயாதீனமானதுமான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்கும் சட்டவாக்க நோக்கத்துடன் அதன் யாபபுமய அதிகாரங்களை செயற்படுத்துவதில் எந்தவொரு பயமும் பட்சபாதமும் இன்றி உறுதியுடன் அர்ப்பணித்துள்ளது.

1.2. நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று, நோக்கம்

நோக்கு

நம்பகமானதும், பலம்பொருந்திய, சுயாதீனமான, பக்கசார்பற்ற பொது மக்களுக்கு உகந்த பொலிஸ் சேவையினை உருவாக்குதற்கு உதவிகளை வழங்குதல்,

பணிக்கூற்று

"பொது மக்களின் முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் மானிட உரிமையினைப் பாதுகாத்து சட்ட ஆதிக்கத்தினை கௌரவிக்கும் பண்புசார் தரம்மிக்க பொலிஸ் சேவையினை உருவாக்குதற்கு உதவிகளை வழங்குதல்."

நோக்கம்

- அரசியல் யாப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மனித உரிமையினை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸ் சேவைக்கு எதிராக காணப்படும் பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரணை செய்து பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குதல்.
- பொது மக்களுக்கு உகந்த பொலிஸ் சேவையினை உருவாக்கும் வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக நேர்மனப்பாங்கு வேலைத்திட்டங்களை அமுல்படுத்தல்.
- பொலிசாருக்கு எதிராக பொது மக்கள் முறைப்பாடுகளை குறைத்து பொலிஸ் சேவையின் பண்புசார் தரத்தினை விருத்தி செயற்வதற்காக பொது மக்களின் பங்குபற்றலினைப் பெற்றுக் கொள்ள செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

பெறுமதிகள்

சுயாதீனம்
நேர்மை
பொறுப்புக்கூறல்
பக்கசார்பற்றத்தன்மை
ஒத்துழைப்பு
தொடர்ச்சியான கற்றல்
ஆக்கத்திறன்

1.3 **தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களும் வகிபாகமும்**

அரசியலமைப்பின் 21வது திருத்தத்தில் 155 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களும் வகிபாகங்களும் கீழ் காட்டப்பட்டுள்ளன.

(1) பொலிஸ்மா அதிபரைத் தவிர பொலிஸ் அதிகாரிகளை நியமித்தல், பதவி உயர்வு செய்தல், அவர்களது ஒழுக்கக் கட்டுப்பாடு அவர்களை தொழிலில் இருந்து நீக்கும் அதிகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்

(2) .பொது மக்களிடம் கிடைக்கும் முறைப்பாடு மற்றும் அதிருப்தியடைந்த ஏதேனும் ஒரு நபரினால் பொலிஸ் அதிகாரியொருவருக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவற்றை விசாரிக்கும் செயன்முறை ஆணைக்குழுவினால் ஸ்தாபிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட ஏதேனும் சட்ட ஏற்பாடுகளுக்கிணங்க நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்

(3) பொலிஸ் ஆணைக்குழு பின்வரும் விடயங்களில் பொலிஸ்மா அதிபரை விசாரிக்க வேண்டும்

(அ) சமகாலத்தில் அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு கொள்கைக்கும் உட்பட்டு நிலைமை தொடர்பாக அமைச்சர்கள் குழுவால் தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு கொள்கைக்கும் உட்பட்டு பொலிஸ் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் இடமாற்றம் செய்வதற்கான நடைமுறைகளைத் தயாரிப்பது

(ஆ) பயிற்சி மற்றும் பொலிஸ் சேவையின் வினைத்திறன் மற்றும் சுயாதீனத்தை அபிவிருத்தி செய்தல்

(இ) தேசிய மற்றும் மாகாண பிரிவின் பயன்பாட்டிற்கு அவசியமான ஆயுதங்கள், வெடிபொருட்கள் மற்றும் வேறு உபகரணங்களின் தன்மை மற்றும் வகையை தீர்மானித்தல்

(ஈ) நடத்தைக் கோவை மற்றும் ஒழுக்கம் தொடர்பான நடைமுறைகளை வகுத்தல்

உள்ளடங்கலாக பொலிஸ் அதிகாரிகள் தொடர்பான விடயங்களை திட்டமிடும் போது அவ்விடயங்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட வேண்டும்.

(4) தேசிய பொலிஸ் ஆணைக்குழு, ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் செயற்படுத்துவதுடன் அரசியலமைப்பின் 09 ஆவது அட்டவணையின் இணைப்பு 1 இன் 1 வது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

1.4 ஆணைக்குழுவின் உள்ளடக்கம்

தவிசாளர்

ஈ.டப்ளிவ்.எம்.லலித் ஏக்கநாயக்க(ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி)

அங்கத்தவர்கள்

1.திருமதி.டீ.என். ரேணுக்கா ஏக்கநாயக்க (ஓய்வு பெற்ற அமைச்சு செயலாளர்)

2.கணபதிப்பிள்ளை கருணாகரன்(ஓய்வு பெற்ற மாவட்ட செயலாளர்)

3.திரு. சரத் காமிணி த சில்வா


4.திரு.தில்சான் கபில ஜயசூரிய அவர்கள்(சட்டத்தரணி)

5. திரு. ஏ.ஏ.எம் இல்லியாஸ் அவர்கள் (ஜனாதிபதி சட்டத்தரணி)

செயலாளர்

திருமதி. தமரா டீ.பெரேரா(இலங்கை நிர்வாக சேவை-விசேட தரம் (ஓய்வு பெற்ற)

தேசிய பொலிஸ் ஆணைக்குழு
நிர்வாக கட்டமைப்பு



1.6 ஆணைக்குழுவினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள செயற்பாட்டு பிரிவுகள் மற்றும் அலகுகள்

1. நிர்வாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு
   1.1. நிர்வாக பிரிவு
   1.2. சட்ட அலகு
   1.3. தகவல் மற்றும் தொடர்பாடல் அலகு
   1.4. ஊடக பிரிவு
2. பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணை பிரிவு
   மேற்கு காரியாலயம் I மேற்கு காரியாலயம் II, தெற்கு அலுவலகம்,வடக்கு மாகாண காரியாலயம்,மத்திய மாகாண காரியாலயம்,கிழக்கு மாகாண காரியாலழ்,ஊவா மாகாண காரியாலயம்,சபரகழுவ மாகாண காரியாலயம்)
3. அலுவலக மற்றும் ஒழுக்க பிரிவு
4. மேன்முறையீட்டு பிரிவு
5. நிதிப் பிரிவு

1.7. அமைச்சு அல்லது திணைக்களம் அல்லது மாகாண சபையின் கீழ் காணப்படும் நிறுவன நிதியம்.

பொலிஸ் ஆணைக்குழுவிற்கு இது உரியதல்ல. (தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் இயங்குகின்றது)

1.8. வெளிநர்ட்டு உதவி பெரும் செயற்திட்டங்களின் தகவல்கள் (இருப்பின்)

ஏற்கனவே வெளிநாட்டு உதவி பெருவதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், செஞ்சிலுவை அமைப்பு போன்றவற்றுடன் கலந்துரையாடப்படுவதுடன் உதவி பெருவதான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன

02. **அத்தியாயம்**

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

ஒவ்வொரு பிரிவுகளினதும் முன்னேற்றங்கள், எதிர்கொள்ளப்பட்ட சவால்கள் மற்றும் எதிர்கால இலக்கு.

2.1 **நிருவாகம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு.**

2.1.1. நிருவாகப் பிரிவு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு தினசரி கிடைக்கும் அனைத்து கடிதங்களையும் குறிப்பிட்டவாறு பிரிவுகளுக்கு விநியோகித்தல் மற்றும் ஆணைக்குழுவில் காணப்படும் மனித வள நிர்வாகம் மற்றும் முகதமைத்துவம்,புதிய அதிகாரிகளை இணைத்துக் கொள்ளல் அவர்களுக்கு தேவையான பயிற்சி வழிகாட்டல் பெற்றுக் கொடுத்தல் ஆணைக்குழுவுக்கு இணைக்கப்பட்டுள்ள பணியாளர் குழாமில் தினசரி நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றல், தேவையான உபகரணங்களையும் பொருட்களையும் பெற்றுக் கொடுத்தல்,நிர்வாக தேவைப்பாடுகளுக்கான ஆணைக்குழு பத்திரங்களை தயாரித்தல் மற்றும் அதற்கமைவாக செயற்படுதல் நிர்வாகப் பிரிவின் பிரதான கடமைப்பாடும் செயற்பாடும் ஆகும். பொது மக்கள் முறைப்பாடுகளை விசாரனண நடவடிக்கைகளுக்காக மாகாண மட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அலுவலகங்கள் தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளும் இப் பிரிவின் கடமைப்பாடுகளுள்ளடங்கும்.

இப் பிரிவின் கீழ் ஆணைக்குழு மற்றும் வெகுசன ஊடகத்திற்கிடையிலான செயற்பாடுகள் தொடர்பாக ஊடக பிரிவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாக தகவல் தொழிநுட்ப பிரிவும் செயற்படுகின்றன

ஆணைக்குழு பணியாளர் குழாம், இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை போன்ற நாடு பூராகவும் வியாபித்துள்ள சேவைகளின் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை, அரச முகாமைத்துவ சேவை மற்றும் தகவல் தொடர்பாடல் சேவை போன்ற இணைந்த அரச சேவைகளின் பணியாளர்களை உள்ளடக்கியதாக காணப்படுகிறது. மாகாண இயக்குனர் பதவிகளுக்காக அரச நிறுவனங்களில் நிர்வாக தரத்தில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.சட்ட உத்தியோகத்தர் மற்றும் ஊடக அதிகாரி போன்ற பதவிகளுக்கு பொலிஸ் ஆணைக்குழுவினால் நேரடியாக உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.மேலும் அரச நிர்வாக அமைச்சிடமிருந்து சேவையில் உள்ள அதிகாரிகளை பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் அரச.பரி. வர்த்தமானி 3.்.2018 க்கமைய ஓய்வு பெற்ற அதிகாரிகள் ஒப்பந்த அடிப்படையில் வெற்றிடங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டனர். அரசியலமைப்பின் 21வது திருத்தத்திற்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட கடமை பரப்பு பரவலாகியமை காரணமாக அக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதுமான மேலதிக பணியாளர் குழாத்தின் முக்கியத்துவம் ஏற்பட்டது.அதற்கமைய இது தொடர்பாக முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு அறிவுறுத்தியதன் பின்னர் மேலதிக பணியாளர் குழாத்துக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அட்டணை இலிருந்து 20 மற்றும் 21வது திருத்தத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட பணியாளர் குழாமின் விபரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

20வது மற்றும் 21 வது திருத்தங்களுக்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கப்பட்ட பணிக்குழாம்

அட்டவணை 01

தொடர் இல	பதவி	20 வது திருத்தத்துக்கமைய அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை	21 வது திருத்தத்துக்கமைய கோரப்பட்ட எண்ணிக்கை	21 திருத்தத்துக்கமைய அனுமதி வழங்கப்பட்ட எண்ணிக்கை
01	செயலளார்	01	01	01
02	சிரேஸ்ட உதவிச் செயலாளர்	01	01	01
03	பணிப்பாளர்	01	03	03
04	மாகாண பணிப்பாளர் (ஒப்பந்தம்)	10	10	10
05	உதவி/பிரதிப் பணிப்பாளர்	02	12	10
06	உதவிச் செயலாளர்	01	01	01
07	பிரதான கணக்காளர்	01	01	01
08	உள்ளக கணக்காய்வாளர்	01	01	01
09	சட்ட அதிகாரி (திணைக்களத்துக்கமைவான)	01	01	01
10	பிரதான விசாரணை அதிகாரி (ஒப்பந்தம்)	01	01	01
11	பிரதான பிரதி விசாரணை அதிகாரி	00	01	00
12	நிர்வாக உத்தியோகத்தர்	01	01	01
13	மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-ஆங்கிலம்)	01	01	01
14	மொழிபெயர்ப்பாளர தமிழ்-ஆங்கிலம்)	01	01	01
16	தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	01	01	01
17	ஊடக அதிகாரி(திணைக்களத்துக்கமைவான)	01	01	01
18	அபிவிருத்தி உத்தியோகத்தர்Æ விசாரணை உத்தியோகத்தர் சேவை	24	30	34
19	முகாமைததுவ் உதவியாளர	22	35	32
20	தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்	04	06	05
21	குழு செயலாளர் ஒப்பந்த அடிப்படையில	01	01	01
22	தரவு செயற்பாட்டாளர் (திணைக்களத்துக்கமைவான)	01	01	01
23	இணைந்த சாரதிச் சேவை	06	10	06
24	அலுவலக பணி உதவியாளர் சேவை	13	20	13
மொத்தம்		**96**	**141**	**127**

அதைப் போலவே 2023.12.31ம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மொத்த பணிக்குழாம் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

2023.12.31 ம் திகதிக்கு பணிக்குழாம் தகவல் அட்டவணை 02

தொடர் இல	பதவி	சேவை	அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை	வேதன குறியீடு	சேவையில் உள்ள		
					நிரந்தர	ஒப்பந்த	வெற்றிடம்
1	செயலாளர்	இல.நி.சே.வி.தரம்	1	SL-3		1	
2	சிரேஸ்ட உதவிச் செயலாளர்	இல.நி.சே. 1	1	SL-1	* 1		
3	பணிப்பாளர்	இல.நி.சே. 1	3	SL-1	# 3		
4	மாகாண பணிப்பாளர்	ஒப்பந்தம்	10	60,000.00		10	
5	பிரதான கணக்காளர்	இல.கண.சேவை 1	1	SL-1	1		
6	உள்ளக கணக்காய்வாளர்	இல.கண.சே. 11/111	1	SL-1			1
7	உதவி /பிரதிப் பணிப்பாளர்	இல.கண.சேவை 11/111	10	SL-1	2		8
8	உதவி /செயளார்	இல.கண.சே 111	1	SL-1	1		
9	சட்ட உத்தியோகத்தர்	திணைக்களத்துக்கமைவான	1	SL-1	1		
10	பிரதான விசாரணை அதிகாரி	ஒப்பந்தம்	1	60,000.00			1
மொத்தம்			**30**		9	11	10
11	நிர்வாக உத்தியோகத்தர்	முகா.உத.சே	1	MN-7	1		
12	மொழி பெயர்ப்பாளர் சி-ஆ	மொ.பெ.சே	1	MN-6			1
13	மொ.பெ.சே(சிங்-தமிழ்	மொ.பெ.சே	1	MN-6	1		
14	தகவல் தொழிநுட்ப அதிகாரி	தொ.அ.சே	1	MN-6	1		
மொத்தம்			**4**		3	0	1
15	ஊடக அதிகாரி	திணைக்களத்துக்கமைவான	1	MN-4	1		
16	விசாரணை அதழகாரி/அபி.உத்	அபி.உத்.சே.	34	MN-4	30		4
17	முகாமைத்துவ உதவியாளர்	முகா.உ.சே	32	MN-2	27	2	3
18	தகவல் தொழிநுட்ப உதவியாளர்	த.தொ.உ.சே	5	MT-1	4		1
19	குழச் செயலாளர்	ஒப்பந்தம்	1	50,000.00		1	
மொத்தம்			**73**		**62**	**3**	**8**
20	தரவுச் செயற்பாட்டாளர்	திணைக்களத்துக்கமைவான	1	MN-1	1		
21	சாரதி	சாரதிச் சேவை	6	PL-3	6		
22	அலுவலக உதவியாளர் சேவை	அலுவலக உதவியாளர் சேவை	13	PL-1	12		1
மொத்தம்			**20**		19	0	1
முழு மொத்தம்			**127**		**93**	**14**	**20**

* வேலை பார்க்கும் அடிப்படையில்
# 1 பதவி வேலை பாரக்கும் அடிப்படையில் ஆகும்..

-2023.01.01ம் திகதி முதல் 2023.12.31ம் திகதி வரை பயிற்சி பாடநெறிகளுக்கு பங்குபற்றல்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மனித வள அபிவிருத்தி மற்றும் கொள்ளளவு அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு 2023 ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை நிறுவனத்தின் அனைத்து பணிக்குழாமும் உள்ளடங்கும் வகையில் பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3

தொடர் இல	பயிற்சி பாடநெறி	பங்குபற்றல்
1	முகா.சே.உதவியாளர் சேவை ஆரம்ப பயிற்சி அமர்வு(5 நாட்கள் ஒன் லயின் 2023.02.20-2023.03.14) திகதி வரை	செல்வி கசுனி விக்கிரமாரச்சி,திரு.ர ஜினசிங்க,சமந்த புஸ்பகுமார
2	ஓய்வூதியச் சம்பளம் தயாரித்தல் மற்றும் ஓய்வு பெறுதல் தொடர்பான பயிற்சி(பொலிஸ் திணைக்கள அதிகாரிகளுடன் 2023.04.21)	நிறுவன மற்றும் ஒழுக்க பிரிவின் அனைத்து பணிக்குழாம்
3	செயன்முறை சட்டதிட்டங்கள் தொடர்பாக பணிக்குழாத்தை அறிவூட்டல் கலந்துரையாடல் 2023.07.04	அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்களும்
4	தாபன விதிக் கோவையின் 2வது அத்தியாயம் தொடர்பாக பணிக்குழாத்தை அறிவூட்டல்-2023.08.02 மற்றும் 2023.08.22	அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்களும்
5	தகவல் தொழிநுட்ப அதிகாரிகளின் இயலுமை விருத்திசெயலமர்வு 2023.06.07.08 இரு தினங்கள்	திரு.கேமிந்த ருபேரு-தகவல் தொழிநுட்ப அதிகாரி
6	ஒழுக்க நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி 2023.08.11(வளவாளர் செல்வி.ராதா நாநாயக்கார பிர.உதவிச் செயலாளர் கல்வி அமைச்சு)	தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனைத்து பணிக்குழாம்
7	ஓய்வூதிய ஒழுங்கு முறையின் 2.12 உருப்புரையின் கீழ் ஓய்வு பெற்ற அதிகாரிகள் தொடர்பாக செயலாற்றல் 2023.08.15	அனைத்து பதவி நிலை உத்தியோகத்தர்களும்
8	சாதாரண நடத்தை மற்றும் ஒழுக்க செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி 2023.0904முதல் 2023.09.08	பணிப்பாளர்.திருமதி.தனுஜா பிரனாந்து திருமதி.திலங்கா விக்கிரமசிங்க(சிரேஸ்ட உதவிச் செயலாளர)
9	அலுவலக நிர்வாகம் மற்றும் நிதிப் பிரமாணம்	செல்வி விக்கிரமாரச்சி திருமதி.சசிகா மேவெல்ல-அபி.உ திருமதி.நுவன்மினி திரு.விக்கிரமசிங்க திரு.சமந்த புஸ்பகுமார-முகாமை.உதவி.சே
10	விலைக்கோரல் செயன்முறை	திருமதி.தனுஜா பிரனாந்து(பணிப்பாளர்) திருமதி.திலங்கா விக்கிரமசிங்க(சி.உ.செ) திருமதி.அரோசா-முகாமை.உதவி)
11	நேர்மறை எண்ணங்கள் மற்றும் தலைமைத்துவ பண்புகள்	லலித் தம்மிக்க பெரேரா(அபி.உத்)
12	ஒழுக்கம் மற்றும் அலுவலக விதிகள்	அலுவலக உதவியாளர் சேவையின் அனைத்து அதிகாரிகளும்
13	அலுவலக ஒழுக்க விதிகள் ஒழுக்கம் மற்றும் போக்குவரத்து விதிகள்	அனைத்து சாரதி பணிக்குழாம்
14	சாதாரண நடத்தை ஒழுக்க செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி 2023.1218ம் திகதி முதல் 2023.12.22SLIDA	நிர்வாக உத்தியோகத்தர்
15	அலுவலக முறைமைகள் கோவைப்படுத்தல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி 2023.12.18 அல்லது 2023.12.22 இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனனம்	அனைத்து முகாமைத்துவ சேவை உதவியாளர் சேவை அதிகாரிகள் மற்றம் அனைத்து பணிக்குழாம்

2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் வரை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கோரப்பட்டுள்ள விண்ணப்பங்கள்

கிடைக்கப் பெற்ற தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை	173
தகவல் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	110
நிராகரிக்கப்பட்டுள்ள கோரிக்கைகளின் எண்ணக்கை	07
தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள எண்ணிககை	56

2.1.2ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் தொடங்கப்பட்டுள்ள மற்றும் ஆரம்பிப்பதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ள புதிய நிகழ்ச்சிகளை திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல்,மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் என்பன இப் பிரிவுகளுக்கான பிரதான பொறுப்பும் கடமையுமாகும்

2.1.3. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப அலகு

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் தொடர்பான நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் இவ் அலகுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்பாகும். புதிய இணையத்தளமொன்றை நிர்மாணித்தல், அதனை இற்றுப்படுத்தி பயன்படுத்துபவருக்கு இலகுவான முறையில் நடத்திச் செல்தல் என்பன இப் பிரிவின் பொறுப்பாகும்

2.1.4 ஊடகப் பிரிவு

தினசரி பிரசுரிக்கப்படும் ஊடக அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவுக்கு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுவதுடன் இப் பிரிவினூடாக இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகவியலாளர்களுடன் நல்லுறவை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதே போல ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக இடைக்கிடையில் ஊடக அறிவிப்புகள் வெளியிடப்படுவதுடன் பொதுமக்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளை அறிவூட்டுவதை இலக்காகக் கொண்டு ஊடக பேச்சுக்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக உபாயமுறை திட்டங்களை வகுத்தல், வருடாந்த வினைத்திறன் அறிக்கைகளை தயாரித்தல் போன்ற ஆணைக்குழுவின் அனைத்து ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளும் இப் பிரிவினூடாக மேற்கொள்ளப்படும் இதற்கு மேலதிகமாக பொலிஸ் அதிகாரிகளின் ஒழுக்கமற்ற மற்றும் அநீதியான செயல்கள் தொடர்பான ஒவ்வொரு ஊடக அறிக்கை தொடர்பாகவும் ஆணைக்குழுவுக்கு விசாரணை அறிக்கை கோர தீர்மானித்துதல்

2.1.5 சட்ட அலகு

பொலிஸ் அதிகாரிகளினால் உச்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அடிப்படை உரிமை மனுக்களகள் தொடர்பாக சட்டமா அதிபருக்கு அவதானிப்புக்களை அறிக்கையிடுதல் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் ரிட் மனுக்களை சமர்ப்பித்தல்,தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விடயப்பரப்பு தொடர்பாக நிர்வாக நியாயாதிக்க சபையில் காணப்படும் அனைத்து கோவைகள் தொடர்பாக செயற்படல்,

ஆணைக்குழுவின் விடயப்பரப்புக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படும் ஏனைய சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட ஆலோசனை வழங்கல் ஆணைக்குழுவின் அனைத்து சகல பிரிவுகளையும் நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் ஏனைய சட்ட ரீதியான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் வழக்குகள் தொடர்பான கோவைகளை மற்றும் சட்ட அலகின் ஏனைய கோவைகள் தொடர்பான ஆவணங்களை ஒழுங்காக நடத்திச் செல்தல் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

2023.01.01 திகதியில் இருந்து 2023.12.31 திகதி வரையான காலப்பகுதியில் உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் விசாரணை நடத்தப்பட்டு வரும் வழக்குகளின் எண்ணிக்கை

அட்டவணை 4

வருடம்	உச்ச நீதிமன்ற வழக்கு	மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு	மொத்த வழக்கு எண்ணிக்கை
2008	01	01	02
2009	02	00	02
2010	08	02	10
2011	04	00	04
2012	04	01	05
2013	03	03	06
2014	09	00	09
2015	14	01	15
2016	15	00	15
2017	12	00	12
2018	17	01	18
2019	39	07	46
2020	82	06	88
2021	30	03	33
2022	30	05	35
2023	23	10	33
மொத்த எண்ணிக்கை	293	40	333

உச்ச நீதிமன்றம் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தற்போது காணப்படும் வழக்குகளுக்கு அமைவான நிறைவடைந்த வழக்கு கோவைகளின் எண்ணிக்கை மற்றும் செயற்பாட்டில் உள்ள கோவைகளின் எண்ணிக்கை. - 2023.01.01 – 2023.12.31 வரை

அட்டவணை 5

வருடம்	நிறைவடைந்த கோவைகள்		செயல்பாட்டு கோப்புகள்	
	மேன்முறையீட்டு நீதிமன்றம்		மேன்முறையீட்டு நீதிமன்றம்	
2008	-	01	01	-
2009	-	01	-	01
2010	-	07	02	01
2011	-	01	-	03
2012	-	02	01	02
2013	03	01	-	02
2014	-	07	-	02
2015	01	10	-	04
2016	-	07	-	08
2017	-	07	-	05
2018	-	07	01	10
2019	05	11	02	28
2020	02	17	04	65
2021	01	09	02	21
2022	02	13	04	16
2023	-	02	07	24
	14	**103**	**24**	**192**
மொத்த சேகரிப்பு	**117**		**216**	

2023.01.01 முதல் 2023.12.31 வரை சட்ட அலகுக்கு கிடைத்துள்ள கடிதங்கள் மற்றும் பதில் அனுப்புகைகள் தொடர்பான தேர்ச்சி **அட்டவணை 6**

மாதம்	மாதத்துக்குள் கடிதங்கள் கிடைத்தல்	மாதத்துக்குள் பதில் அனுப்பிய கடிதங்களின் எண்ணிக்கை	மாதத்துக்குள் கடிதம் அனுப்பாத கடிதங்கள்
ஜனவரி	41	41	0
பெப்ரவரி	138	138	0
மார்ச்	77	71	6
ஏப்ரல்	30	29	1
மே	50	49	1
ஜீன்	134	134	0
ஜுலை	187	185	2
ஆகஸ்ட்	136	135	1
செப்டெம்பர்	146	144	2
ஒக்டோபர்	83	79	4
நொவெம்பர்	91	89	2
டிசெம்பர்	31	30	1
மொத்தம்	**1144**	**1124**	**20**

நிர்வாக மேன்முறையீட்டு அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு கோவைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்ட விதம் 2023.01.01-2023.12.31 வரை

அட்டவணை 7

பதவி	அரச சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த கோவைகள்	பணி நிறைவடைந்த கோவைகள்	**2023 இல தே.பொலி.ஆ பதிதாக ஆரம்பிக்கப்பட்ட கோவைகள்**	செயற்பாட்டில் உள்ள மொத்த கோவைக்	அவதானிப்புகள் பெற்றுக் கொடுக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அப் பதவிக்கு மேல் உள்ள அதிகாரிகளின் கோவைகள்	121	22	35	134	26
பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அப் பதவிக்கு கீழ் உள்ள அதிகாரிகளின் கோவைகள்	481	75	56	462	73
மொத்தம்	**602**	**97**	**91**	**596**	**99**

2.2 பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை பிரிவு

அரசியலமைப்பின் 155 எ(2) உறுப்புரைக்கமைய பொதுமக்களினால் பெற்றுக் கொடுக்கப்படும் முறைப்பாடுகள் மற்றும் அதிருப்தியடைந்த ஏதேனும் ஒரு நபரினால் பொலிஸ் அதிகாரியொருவருக்கு அல்லது பொலிஸ் சேவைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்ளுதலுக்கும் அவற்றை விசாரரணைக்குட்படுத்துவதற்குமான முறைமைகளை ஆணைக்குழு வகுக்க வேண்டும் என்பதோடு பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் ஒரு சட்டத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இவ் பொதுமக்கள் முறைப்பாடு விசாரணை நடவடிக்கைகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நிவாரணம் வழங்கப்படுகையில் ஆணைக்குழுவினால் பொலிஸ்மா அதிபருக்கு அது உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும். இப் பொதுமக்கள் முறைபாபடுகள் விசாரணை நடவடிக்கைகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் முறைப்பாட்டு விசாரணை பிரிவினால் மற்றும் ஒன்பது மாகாணங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 9 மாகாண அலுவலகங்களில் மேற்கொள்ளப்படும்.

பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் சேவைகள்

- முறைப்பாடுகளைப் பெறுப்பேற்றல்.
- விசாரணைகளை மேற்கொள்ளல்.
- முறைப்பாட்டாளர்களை அறிவுறுத்தல்.
- பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது பொலிஸ் சேவையினால் ஏதேனும் கடமைகளை புறக்கணித்தல் அல்லது ஒழுக்கத்திற்கு எதிராக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பின் அது தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடுகளை மேற்கொள்வது பொலிஸ்மா அதிபர் அல்லது உரிய பொறுப்பாளர்களுக்கு அனுப்புதல்.
- பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பில் பொலிசாரினால் செயற்பட வேண்டிய முறைகள் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல்.
- பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்.
- முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படும் முறைகள் தொடர்பாக மக்களுக்கு வழிகாட்டல் ஆலேசனைகளை வழங்குதல்.
- ஆணைக்குழுவிற்கு உரியதல்லாத முறைப்பாடுகளுக்காக முறைப்பாட்டாளர்களை உரிய இடத்திற்கு அனுப்புதல்.
- 1960 துரித அழைப்பு சேவைகள் மூலம் 24 மணித்தியாலங்கள் பூராகவும் முறைப்பாட்டாளர்களுக்கு துரித நிவாரணங்களை வழங்குதல்.

2020 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் 2021 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பொது மக்கள் முறைப்பாட்ட விசாரணை செயற்பாட்டு முறைகள் 2022 ஆம் ஆண்டில் மிகுந்த ஒழுங்காக மற்றும் முறையான அடிப்படையில் முன்னெடுக்கப்டுகின்றது. விசாரணை உத்தியோகத்தர்களைப் போன்று மாகணப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் பணிப்பளர் (பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை) இனால் இவ் விசாரணை செயற்பாட்டு முறைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளுக்கு அமைய மற்றும் இடைக்கிடையே ஆணைக்குழுவினால் வழங்கப்படும் கட்டளைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

I. புதிய முறைப்பாடுகளை பொறுப்பேற்றல்.

பொலிஸ் உத்தியோகத்தரின் அல்லது பொலிஸ் சேவையின் மூலம் ஏதேனும் அநீதி இடம்பெறும் பட்சத்தில் பொது மக்களினால் அல்லது சிவில் அமைப்பினால் அல்லது அவர்களின் பிரதிநிதிகளினால் · சட்டத்தரணி ஊடாக சமர்பிக்கப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

- ❖ முறைப்பாடுகள் கிடைக்கும் முறைகள்.

I. தபால் மூலம் அனுப்புவதனால்.
II. பக்ஸ் செய்வதன் மூலம்.
III. மின் அஞ்சல் மூலம்.
IV. பொது மக்கள் முறைப்பாட்டு முகாமைத்துவ முறைமைக்கு உள்ளடக்குவதன் மூலம்.
V. வருகை தந்து கையளித்தல்
VI. 1960 அவசர அழைப்பு சேவைக்கு அறிவிப்பதன் மூலம்.
VII. மாகாண அலுவலகங்களுக்கு வருகைதந்து கையளிப்பதன் மூலம்.

II. முறைப்பாடுகளை விசாரணை செய்வதன் மூலம்.

I. பிரதான காரியாலயத்திற்கு கிடைக்கும் புதிய முறைப்பாடுகள் மாகாண ஒருங்கிணைப்பாளர்களால் மாகாண அலுவகங்களுக்கு அனுப்பப்படல்
II. பிரதான அலுவலகத்தினால் அனுப்பப்படும் முறைப்பாடுகளும் மாகாண அலுவலகங்களுக்கு கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு அவ்வந்த மாகாண அலுவலகங்களினால் பதிவு இலக்கம் ஒன்று வழங்கப்படுவதோடு அதன் பிறகு மேற்கு மாகாணத்தை தவிர ஏனைய மாகாண அலுவகங்களினால் குறித்த ஒருங்கிணைப்பு அதிகாரிகளை அறிவூட்டல்
III. முறைப்பாட்டின் சுபாவத்திற்கமைய மாகாண ஒருங்கிணைப்பு அதிகாரிகள் மற்றும் விசாரணை அதிகாரிகள் மூலம் விசாரணை திட்டமொன்று தயாரிக்கப்படல்.
IV. அடிப்படை விசாரணை செயற்பாடுகள் உரிய மாகாண அலுவலகத்தினால் மேற்கெள்ளப்படுகதுடன் அவர்களுக்கு தேவையான அலோசனை வழிகாட்டல்கள் பிரதான அலுவலகத்தின் தவிசாளர்,செயலாளர் மற்றும் பணிப்பாளரினால் வழங்கப்படும்

III. விசாரணை செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்.

I. மாகாணப் பணிப்பாளரினால் விசாரணைகளை பூர்த்த செய்ய முடியுமான அனைத்து முறைப்பாடுகளுக்கும் உரிய மாகாண பணிப்பாளரின் பரிந்துரை அறிக்கையுடன் கோவை பிரதான அலுவலத்திற்கு அனுப்பப்படுகின்றது.

II. பணிப்பாளர்(பொது மக்கள் விசாரணை பிரிவு) அதனை பூர்த்தி செய்ய முடியுமா என்பதனை பரிசீலனை செய்து, மேலதிக அறிக்கை கோரி விசாரணைகளை மேற்கொள்வதற்கு அல்லது விசாரணைகளை நிறைவு செய்வதற்கு தேவையான ஆணைக்குழு பத்திரங்களை தயாரித்து ஆணைக்குழு பத்திரங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு மாகாண ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கல்

III. பணிப்பாளர்(பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை)யின் பரிந்துரைகள் உள்ளடக்கி ஆணைக்குழுவின் தீர்மானத்தை பெற்றுக் கொள்வதற்கு குறித்த ஆணைக்குழு பத்திரத்தை தயாரித்து ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல்

IV. ஆணைக்குழுவின் தீர்மானத்திற் அமைய விசாரணை செயற்பாடுகளை பூர்த்தி செய்தல் அல்லது சபையின் ஆலோசனைகளுக் அமைய தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொள்ளல்

V. 7வது ஆணைக்குழுவின் 2023.07.27ம் திகதி நடைபெற்ற 12வது ஆணைக்குழு கூட்ட அமர்வின் விசேட தீர்மானத்தின் மூலம் அத் தீர்மானத்தில் உள்ளடங்கும் கீழ்வரும் நிபந்தனைகளுக்குள்ளடங்கும் பொது மக்கள் முறைபாடுகள் . ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கப்படாது அவற்றின் விசாரணைகளை நிறைவு செய்யும் இயலுமை பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

I. மத்தியஸ்த சபைக்கு அனுப்பப்பட்டு இணக்கப்பாட்டுக்குட்பட்ட முறைப்பாடுகள்
II. தற்போதாகும் போது தீர்க்கப்பட்டுள்ள முறைப்பாடுகள்
III. மேலதிக விசாரணை அவசியமற்றதாக முறைப்பாட்டாளரினால் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் முறைப்பாடுகள்
IV. ஆணைக்குழுவினால் மேலதிக தகவல் கோரியும் முறைப்பாட்டாளரினால் தகவல் வழங்கப்படாத முறைப்பாடுகள்

அதற்கமைய அந்த தீர்மானத்திற்குட்படும் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைனளை நிறைவு செய்தல் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்படும்

IV. ஒவ்வொரு அலுவலகங்களுக்கமைய 2023.01.01ம் திகதி முதல் 2023.12.31ம் திகதி வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை

அட்டவணை 8

மாவட்டம்	2023 வருடத்துக்குள் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை
மேற்கு 1	569
மேற்கு 11	433
தெற்கு	332
வடமேற்கு	221
மத்திய	195
சப்ரகமுவ	193
வட மத்திய	160
கிழக்கு	130
ஊவா	129
வடக்கு	86
மொத்தம்	2448

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை பிரிவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2023 வருடத்தில் அதிகரித்துள்ளது அவதானிக்கப்படுகிறது என்பதுடன் அவற்றுள் ஏறக்குறைய பாதியளான எண்ணிக்கை மேற்கு மாகாணத்திற்கமைவாக கிடைக்கப்பெற்றுள்ளது.மேற்கு மாகாண அலுவலகம் 1 இனால் முழு கொழும்பு மாவட்டமும் உள்ளடங்கும் வகையில் மற்றும் மேற்கு மாகாண அலுவலகம் 11 இனால் மேற்கு மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தை தவிர ஏனைய அனைத்து பொலிஸ் அதிகாரப்பிரிவும் உள்ளடங்கும் வகையில் பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

2023.01.01திகதியில் இருந்து 2023.12.31ம் திகதி வரையில் பொதுமக்கள் முறைப்பாட்டு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை (முறைப்பாடுகளின் சுவாபத்துக்கமைய) அட்டவணை 9

முறைப்பாட்டின் சுபாவம்	2023 வருடத்தில் கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை
போலிசினால் நடவடிக்கை எடுக்காமை	810
அதிகார துஸ்பிரயோகம்	563
பட்சபாதம்	450
இலஞ்சம்,ஊழல்	112
போலி குற்றச்சாட்டு	93
போதைப்பொருள் குற்றம்	55
சட்ட ரீதியற்ற தடுத்து வைப்பு	34
தாக்குதல்	32
சித்திரவதை செய்தல்	17
பெண்களையும் சிறுவர்களையும் துன்புறுத்தல்	13
பொலிஸ் தடுப்பில் இருக்கையில் மரணமடைதல்	3
வேறு(இங்கு காட்டப்பட்டுள்ள சுபாவங்களுக்கு அமையாத வேறு முறைபாடுகள்)	266
மொத்தம்	2448

பொலிஸ் செயற்படாமை,அதிகார துஷ்பிரயோகம் பட்சபாதம் என்பன தொடர்பாக அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன

iii. **2023.01.01ம் திகதி முதல் 2023.12.31ம் திகதி வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வதில் உள்ள தேர்ச்சி**

i) 2016,2017,2018,2019 மற்றும் 2020 வருடங்களுக்கான பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை

அட்டவணை 10

வருடம்	**2023.01.01ம் திகதி விசாரணை நடத்துவதற்கு இருந்த எண்ணிக்கை**	**விசாரணைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை**	**விசாரணைகள் நிறைவுறுத்துவதற்குள்ள எண்ணிக்கை**
2016	03	01	02
2017	00	00	00
2018	71	02	69
2019	94	11	83
2020	257	99	158
மொத்தம்	**425**	**113**	**312**

ii. **2021வருடத்துக்கான பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை** அட்டவணை 11

மாகாணம்	2023.01.01 ஆண்டில் விசாரணை மேற்கொள்வதற்கிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை	விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள எண்ணிக்க	விசாரணைகள் பூர்த்தி செய்வதற்கு எஞ்சியுள்ளவைகளின் எண்ணிக்கை
மேற்கு 1	353	85	268
மேற்கு 11			
தெற்கு	124	79	45
வடமேல்	27	11	16
மத்திய	115	70	45
சப்ரகமுவ	52	36	16
வட மத்தி	35	14	21
ஊவா	29	15	14
கிழக்கு	34	25	9
வடக்கு	53	25	28
மொத்தம்	822	822	462

iii. **2022வருடத்துக்கான பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை** **அட்டவணை 12**

மாகாண அலுவலகம்	2023.01.01ம் திகதிக்கு விசாரணைகள் நடத்தப்படவிருந்த எண்ணிக்கை	விசாரணைகள் நிறைவடைந்திருந்த எண்ணிக்கை	விசாரணைகள் நிறைவு செய்வதற்கு எஞ்சியுள்ள எண்ணிக்கை
மேற்கு 1	251	71	180
மேற்கு 2	232	148	84
கிழக்கு	194	96	98
வட மேற்கு	122	65	57
மத்திய	128	42	86
சப்பிரகமுவ	101	66	35
வட மத்திய	92	36	56
ஊவா	69	45	24
கிழக்கு	55	21	34
வடக்கு	56	27	29
மொத்தம்	1300	617	683

2023வருடத்துக்கான பொது மக்கள் முறைப்பாட்டு விசாரணை அட்டவணை 13

மாகாண அலுவலகம்	கிடைக்கப்பெற்ற முழு எண்ணிக்கை	விசாரணைகள் நிறைவு செய்துள்ள எண்ணிக்கை	விசாரணைகளை நிறைவு செய்வதற்கு எஞ்சியுள்ள எண்ணிக்கை
மேற்கு1	569	140	429
மேற்கு2	433	155	278
கிழக்கு	332	68	264
வடமேற்கு	221	36	185
மத்திய	195	23	172
சப்பிரகமுவ	193	29	164
வடமத்திய	160	55	105
ஊவா	129	10	119
வடக்கு	86	18	68
மொத்தம்	2448	561	1887

2016 இல 12 உடைய தகவல் அறியும் கட்டளைச் சட்டத்திற்கமைய பொது மக்கள் முறைப்பாட்டுக்கமைய தகவல்களை முறைப்பாட்டாளர்களுக்கு வழங்கல்

V. 2016 இன் அறியும் கட்டளைச் சட்டத்திற்கமைய பொது மக்கள் முறைப்பாட்டுக்கமைய முறைப்பாட்டாளர்களினால் கோரப்படும் அவர்களது முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைக்கமைவான விசாரணைகளுக்கமைவான ஆவணங்களை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பெற்றுக் கொடுத்தல்

VI. 1960 அவசர அழைப்பு சேவை

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 1960 துரித அழைப்புச் சேவை 2013ம் வருட கடைசிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அதன் மூலம் கீழ்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

- பொலிசின் சேவையொன்றை பெற்றுக் கொள்வதில் அதிருப்பதியடைந்த பொதுமக்களினால் பெயர் குறிப்பிடப்பட்ட அல்லது பெயர் குறிப்பிடப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக முறைப்பாட்டின் சுபாவத்திற்கமைய மற்றும் முறைப்பாட்டாளரின் இரகசியம் பேணப்படும் வகையில் சேவையை பெற்றுக் கொடுத்தல்
- இலங்கை பொலிஸ் அதிகாரிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் சேவையில் இருந்து வெளியேற்றல் வரையிலான ஒழுக்க நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் மேன்முறையீடுகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொடுத்தல்

வருடத்தின் 365 நாட்களும் நாளின் 24 மணித்தியாலங்களும் இச் சேவை செயற்பாட்டில் உள்ளது.

1960 துரித அழைப்புச் சேவை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் பொது மக்கள் முறைப்பாடு தொடர்பான சேவை வழங்கப்பட்டுக் கொண்டிருப்பதுடன் அவை கீழ் கூறப்படும் முறைப்பாடுகள் தொடர்பானவை ஆகும்.

A. பொலிசாரினால் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படாமை
B. பொலிஸ் நிலையத்துக்குள் பொலிஸ் அதிகாரிகளினால் தாக்கப்பட்டமை
C. பொலிஸ் அதிகாரிகளினால் அதிகார துஸ்பிரயோகம் செய்தல்
D. பொலிஸ் அதிகாரிகள் பெண்கள் சிறுவர்களை துன்றுறுத்தல்
E. பொய் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கைது செய்தல்
F. பொலிஸ் அதிகாரிகள் பட்சபாதமாக செயற்படுதல்

தற்போதைய 7வது ஆணைக்குழுவின் தவிசாளரின் ஆலோசனைக்கமைய 2023.10.13ம் திகதி முதல் அறிவிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பாக நிறுவன மற்றும் ஒழுக்கப்

பிரிவினாலும் ஏனைய பொலிஸ் அதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பாக மேன்முறையீட்டுப் பிரிவினாலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதிகாரிகளை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது

சேவை பெற்றுக் கொடுக்கப்படும் விதம்

- முறைப்பாட்டாளருக்கு செவிமடுத்து முறைப்பாட்டை குறித்துக் கொள்ளல்
- பொது மக்கள் முறைப்பாட்டு பிரிவு தொடர்பான விசாரணை, குறித்த மாகாண ஒருங்கிணைப்பணைப்பாளருக்கு அறிவித்தல்
- அரச அறிவித்தல் பெற்ற அரச அறிவித்தல் பெற்ற பொலிஸ் அதிகாரிகளின் விசாரணை,நிறுவன மற்றும் ஒழுக்கப் பிரிவின் பிரதானிகளுக்கு அறிவிப்பதன் மூலம் குறித்த விடயம் தொடர்பாக அவ் அதிகாரிகளுக்கு அறிவித்தல்
- பொலிஸ் அதிகாரிகளின மேன்முறையீடு தொடர்பாக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுபள் தொடர்பாக அச் சந்தர்ப்பத்தில் குறித்த தகவல் தொகுதியை பரிசோதித்து காணப்படும் நிலைமையை அறிவித்தல்
- அவ்வாறு தகவல் தொகுதியில் இருந்து தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் மேற்குறித்த பிரிவுத் தலைவர்க்கூடாக தகவல் பெற்றுக் கொண்டதன் பின்னர் அறிவித்தல்.
- பொது முறைப்பாட்டாளர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளினால் தேசிய பொலிஸ' ஆணைக்குழுவுக்கு தபால் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் முறைப்பாடுகளும் மேற்முறையீடுகளும் கடிதங்களும் தொடர்பாக தபால் செயற்தொகுதியினூடாக பரிசோதித்து அங்கு நிலவும் நிலவரத்தை அறிவித்தல்

1960 துரித அழைப்புச் சேவைக்கு கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை : *அட்டவணை 14*

2023.01.01திகதி முதல் 2023.12.31 திகதி வரை

மாதம்	(2) பொது மக்கள் முறைப்பாடு			(3) பொலிஸ் அதிகாரிகளின் விசாரணை				(4)	(5)	(6)
	(I) பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிÆபொலிஸ் அத்தியட்சகர் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்து உடனடி நிவாணரம் பெற்றுக் கொடுத்த எண்ணிக்கை	(II) உடனடி நிவாரணம் வழங்கப்பட முடியாத பிணக்குகள் தொடர்பாக உடனடி ஆலோசனை வழங்கப்பட்ட சம்பவங்கள்	(III) மொத்த எண்ணிக்கை (2.I)+(2.II)	(I) மேன்முறையீட்டு பிரிவு	(II) நிறுவன மற்றம் ஒழுக்கப் பிரிவு	(III) AAT பிரிவு	(IV) மொத்த எண்ணிக்கை (3.I)+(3.II) +(3.III)	ஆணைக்குழு விடயப்பரப்புக்கமைய கிடைத்த முறைப்பாட்டு விசாரணை எண்ணிக்கை (2+3)	பொது மக்களினால் வேறு நிறுவனங்கள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்ட எண்ணிக்கை	1960 துரித அழைப்பு சேவைக்கு கிடைத்த மொத்த அழைப்புகளின் எண்ணிக்கை (4+5)
ஜனவரி	60	282	343					343	423	766
பெப்ரவரி	59	222	281					281	472	753
மார்ச்	65	453	518					518	455	973
ஏப்ரில்	70	262	332					332	483	815
மே	69	381	450					450	440	890
ஜூன்	31	211	242					242	329	571
ஜூலை	10	215	225					225	432	657
ஆகஸ்ட்	111	350	461					461	497	958
செப்டெம்பர்	69	357	426					426	483	909
ஒக்டோபர்	69	401	470	429	4	1	434	904	268	1172
நொவெம்பர்	37	145	182	664	2	2	668	850	171	1021
டிசெம்பர்	70	410	480	1048	8		1056	1536	139	1675
மொத்தம்	720	3689	4410	2141	14	3	2158	6568	4592	11160

மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகள்:

(அ). பொலிசினால் அநீதிக்குட்பட்ட பொது மக்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளின் விசாரணைகள் தொடர்பாக உடனடியாக செயற்பட்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 1960 உடனடி அழைப்புச் சேவையினூடாக 100% வினைதிறனான மெச்சத்தக்க சேவையொன்றை பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான தலையீடு உச்ச பட்சமாக வழங்கப்பட்டுள்ளது.

(ஆ).பெற்றுக் கொள்ளப்படும் முறைப்பாடுகளின் தேவைப்பாடுகளுக்கமைய இணையத்திற்கூடாகவும் குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது அரச அறிவிப்பு அதிகாரியொருவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(இ). அவ்வாறு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் 3 தொடர்பாக பிராந்தியத்திற்கு பொறுப்பான அதிகாரிகளினால் துரித விசாரணைகள் நடத்தப்பட்டு தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவருக்கும் உப பொலிஸ் பரிசோதகர்கள் இருவருக்கும் பெண் உப பொலிஸ் பரிசோதகர்கள் இருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

2.3 நிறுவன மற்றும் ஒழுக்க பிரிவு

இலங்கைப் பொலிஸின் அரச அறிவிப்பு அதிகாரிகளான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி பதவி வரை ஆட்சேர்ப்பு,நியமிப்பு,பதவி உயர்வு,பதில் கடமையாற்றும் நியமிப்பு, இடமாற்றம், நிச்சயப்படுத்தல்,சேவையில் இருந்து ஓய்வு பெறுதல் ஆகியவை இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிளது.

அது போலவை நிறுவன மற்றும் ஒழுக்க பிரிவின் மூலம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து உயர்ந்த பதவிகளை வகிக்கும் அனைத்து அதிகாரிகளினதும் மேன்முறையீடு தொடர்பாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்

நிறுவன மற்றும் ஒழுக்க பிரிவின் செயற்பாடுகள்

1) இலங்கைப் பொலிஸ் சாதாரண மற்றும் விசேட அதிரடிப்படை அரச அறிவிப்பு அதிகாரிகளான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியில் இருந்து சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி பதவி வரை ஆட்சேர்ப்பு,நியமிப்பு,பதவி உயர்வு,முற்திகதியிடல்
2) அவர்களின இடமாற்றம் தொடர்பான நடவடிக்கை
3) அரச அறிவிப்பு அதிகாரிகளின் ஓய்வு பெறல், பணியில் நிச்சயப்படுத்தல்,வெளிநாட்டு லீவு,ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றல் என்பன தொடர்பான நடவடிக்கைகள்
4) அரச அறிவிப்பு அதிகாரிகளின் ஒழுக்கம் தொடர்பான செயற்பாடு
5) அரசியல் பழிவாங்கலுக்குட்பட்ட அதிகாரிகள் தொடர்பாக செயற்படல்

2023.01.01 திகதி முதல் 2023.12.31 திகதி வரை இப் பிரிவினால் நிறைவேற்றப்பட்ட கடமைகள்

அட்டவணை 15

தொடர் இல	விபரம்	கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	பெற்றுக் கொடுக்கப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை	தற்போது செயற்பாட்டில் உள்ள கோவைகளின் எண்ணிக்கை
01	**பதவியுயர்வு·முற் திகதியிடல் மேன்முறையீடு**			
	iஉதவிப் பொலிஸ் அத்தியட்சகர்	142	62	80
	ii. பொலிஸ் அத்தியட்சகர்	204	169	35
	iii. சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்	50	32	18
	iv. பிரதிப் பொலிஸ்மா அதிபர்	16	16	-
	v. சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்	12	12	-
02	இடமாற்றம்			
	I உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்	64	64	-
	ii. பொலிஸ் அத்தியட்சகர்	21	21	-
	iii. சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்	48	48	-
	iv. பிரதிப் பொலிஸ்மா அதிபர்	26	26	-
	v. சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்	15	15	-
03	நிரந்தரப்படுத்தல்			
	i. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்	103	93	10
04	கடமையை மேற்கொள்வதற்காக நியமிப்பு செய்தல்			
	i. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்	-	-	-
	ii. பொலிஸ் அத்தியட்சகர்	01	01	-
	iii. சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்	27	27	-
	iv. பிரதிப் பொலிஸ்மா அதிபர்	27	27	-
	v. சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்	10	10	-
05	**உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேவையில் தகுதிகாண் காலத்தை நீட்டிப்பு செய்தல்**			
	i. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்	58	54	04
06	ஓய்வு பெறுதல்			
	i. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்	52	52	-
	ii. பொலிஸ் அத்தியட்சகர்	19	18	01
	iii. சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்	15	14	01
	iv. பிரதிப் பொலிஸ்மா அதிபர்	-	-	-
	v. சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்	01	01	-
மொத்தம்		**911**	**762**	**149**

அரச அறிவிப்பு அதிகாரிகளின் ஒழுக்க நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் (2023.01.01 முதல் 2023.12.31 வரை)

அட்டவணை 16

01	ஒழுக்க நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள வேண்டுகோள்கள்	கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீடுகள்/ ஏற்கனவே நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒழுக்க கோவை எண்ணிக்கை	கொடுக்கப்பட்ட தீர்மானங்களின் எண்ணிக்கை	தீர்மானம் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய எண்ணிக்கை
	i.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்	82	23	59
	ii. பொலிஸ் அத்தியட்சகர்	15	07	08
	iii. சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்	27	09	18
	iv. பிரதிப் பொலிஸ்மா அதிபர்	09	06	03
	v. சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்	08	07	01
	வேறு முறைப்பாடுகள்	09	01	08
மொத்தம்		**150**	**53**	**97**

1.4 மேன்முறையீட்டு பிரிவு

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளை நியமித்தல், இடமாற்றம் செய்தல்.ஒழுக்க நடவடிக்கைகள் தொடர்பான பணிகள், ஒப்பந்த அடிப்படையில் பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள பதவிகளில் உள்ள அதிகாரிகளை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அமைவான பணிகள் மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள பதவிகளின் மேன்முறையீடுகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் அவை கோவைப்படுத்தல், பொலிஸ் மா அதிபருக்கு அறிக்கையிடல் ஆணைக்கழு பத்திரங்களை தயாரித்து ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் ஆணைக்குழுவின் தீர்மானங்களை குறித்த மேன்முறையீட்டாளர்களுக்கு அறிவித்து அனுப்பல என்பன இப் பிரிவின் பிரதான செயற்பாடாகும். அதைப் போலவே தகவல் அறியும் கட்டளைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரியுள்ள தரப்பனருக்கமைவான வகையில் தகவல் பெற்றுக் கொடுத்தலும் இப் பிரிவின் கீழ் செயற்படுத்தப்படும்.

மேன்முறையீட்டு வகைகள்

- சேவையில் இருந்து விலகிய அதிகாரிகளை மீண்டும் சேவையில் ஸ்தாபிப்பதற்காக
- பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ள அதிகாரிகளை மீண்டும் பணியில் ஸ்தாபிப்பதற்காக
- நியமனம் இரத்துச் செய்யப்பட்ட அதிகாரிகளை மீண்டும் சேவையில் ஸ்தாபிப்பதற்காக
- பதவி உயர்வு பெற்றுக் கொள்ளல், பதவி உயர்வு முற் திகதியிடல் மற்றும் தவறான முறையில் பெற்றுக் கொடுக்கப்பட்ட பதவி உயர்வுகள் தொடர்பான மேன்முறையீடு
- ஒழுக்க கட்டளைக்கு எதிரான மேன்முறையீடு
- இடமாற்றம் பெற்றுக் கொள்ளுதல், இடமாற்றம் இரத்துச் செய்துக் கொள்ளல் தொடர்பான மேன்முறையீடு
- ஓய்வு பெற வைத்தல் தொடர்பான மேன்முறையீடு

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தொடர்பாக கீழ் வரும் பணிகளின் போது நியமிப்பு அதிகாரி மற்றும் ஒழுக்காற்று அதிகாரியாக செயறப்படல்

i. நியமிப்புகள் தொடர்பான நேர்முகப்பரீட்சை சபைகள் மற்றும் மேன்முறையீட்டு சபைகளை ஏற்படுத்தலில் இருந்து நிலையப்பொறுப்பதிகாரி பதவி வழங்கள் வரையிலான செயற்பாடுகளை நடத்தல்

ii. ,இடமாற்றங்களை மேற்கொள்ளல் தொடர்பான மேன்முறையீடுகளை பரிசீலித்துப் பார்த்தல்

iii. நிலையப் பொறுப்பதிகாரி பதவியில் இருந்து நீக்கல்

iv. குற்றச்சாட்டு பத்திரிகை வழங்கல், ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளல் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளல் வரையிலான நடவடிக்கைகள்

மேன்முறையீடு தொடர்பான விடயங்கள்

மேன்முறையீட்டு பிரிவு தொடர்பான புள்ளிவிபரங்கள் 202 3.12.31 வரை :

I. மேன்முறையீட்டு பிரிவுக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட மேன்முறையீடுகள் - 2023.01.01 – 2023.12.31 வரை

கால வரையரை	**கடித மற்றும் கோவைகளின் எண்ணிக்கை**	
2023.06.01 திகதி வரை அரச சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த கோவைகள்	2990	
2023.06.01 திகதி வரை அரச சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த கோவைகள்	914	
2023.06.01 திகதி வரை அரச சேவைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைத்த கோவைகள.		**3904**
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு2023.01.01 திகதி முதல்2023.12.31 திகதி வரை கிடைத்துள்ள கடிதங்கள்		
ஜனவரி	545	
பெப்ரவரி	222	
மார்ச்	328	
ஏப்ரில்	261	
மே	314	
ஜூன்	633	
ஜூலை	687	
ஆகஸ்ட்	460	
செப்டெ்பர்	525	
ஒக்டோபர்	519	
நொவெம்பர்	533	
டிசெம்பர்	471	
மொத்தம்		5498
மேன்முறையீட்டு பிரிவுக்கு 2023.12.31 திகதிக்கு கடமையாற்றுவதற்கு உள்ள கடிதங்கள் மற்றும் கோவைகள்		**9402**

II. **2023.01.26 திகதி முதல் 6வது ஆணைக்குழுவினால் 2023.5.11 ம் திகதி வரையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழு பத்திரிக்கைகள் மற்றும் பெறறுக் கொடுக்கப்பட்ட தீர்ப்புகள் தொடர்பான புள்ளிவிபரம்(6வது ஆணைக்குழு)** **அட்டவணை 18**

சபையமர்வு	சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழு பத்திரங்களின் எண்ணிக்கை	தீர்மானங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை
82வது சபையயமர்வில் இருந்து 97வது சுபையமர்வு வரை	118	144

111. **2023.05.16 திகதி முதல் 2023.12.31 திகதி வரை ஆணைக்குழு பத்திரங்கள் மற்றும் தீர்மானங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை - (07 வது ஆணைக்குழு)**

அட்டவணை 15

விபரம்	ஆணைக்குழு பத்திரங்களின் எண்ணிக்கை	தீர்மானங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை
2023.05.18ம் திகதியுடைய1வது சுபையமர்வு மற்றம் 2023.05.25 திகதியுடைய இரண்டாவது சபையமர்வு	13	12
2023.06.01திகதியுடைய 3வது சுபையமர்வு தொடரில் இருந்து 2023.12.21 திகதி வரையிலான 33ஆவது கூட்டத்தொடர் வரை	405	637
மொத்தம’	418	649

2023.06.01 திகதி முதல் 2023.12.31 திகதி வரையான ஆணைக்குழு அமர்வுகளுக்குள் சமர்ப்பிக்கப்பட்ட ஆணைக்குழு பத்திரங்கள் மற்றும் தீர்மானங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை

		ஆணைக்குழு பத்திரங்களின் எண்ணிக்கை (விடயத்துக்கமைய)												
	ஆணைக்குழு பத்திரங்களின் எண்ணிகஜ்கை	01.ஒழுக்காற்று கட்டளை திருத்தம் -DIS	02.பதவி உயர்வு- PRO	03. இடமாற்றம் - TRA	04. ஓய்வு பெற்ற -RET	05. பணியை விட்டகல்தலின் அடிப்படையில் மீண்டும் இணைத்துக் கொள்ளல் -VOP	06.பணித்தடை செய்தலின் அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்தல்- INT	07.நியமனத்தை இரத்துச் செய்தல் அடிப்படையில் மீண்டும் இணைத்துக் கொள்ளல்- TER	08.வேறு - OTHER	09.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் இடமாற்றம் தொடர்பாக- OIC T	10. பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளின் ஒழுக்கம் - OIC /DIS	11.பொறுப்பதிகாரி நேர்முகபரீட்சை- OIC Interview	12.ஒப்பந்த அடிப்படையில் இகைகொகொள்ளல் -	மொத்தப் பயன் பெறுனர்களின் எண்ணிக்கை
01.06.2023	5	2					1			2				15
07.06.2023	8	1	3			2	2							10
15.06.2023	16	2	6			4	1	1		2				19
22.06.2023	21	1	9			7	1	2		1				22
28.06.2023	3		2				1							20
06.07.2023	8		3			2	1	1		1				119
13.07.2023	12	1	4		2	3	2							12
20.07.2023	17	1	8	1		3	2			2				18
27.07.2023	14	1	4	1	1	2	2	2		1				16
03.08.2023	28	2	7	4	2	9		4						15
10.08.2023	21	3	6	1		7		3		1				28
17.08.2023	17		12			2		1	2					17
23.08.2023	12	1	1	1		6	3							12
01.09.2023	9		5	2			1						1	21
08.09.2023	13		6		1	4	2							16
14.09.2023	16	1	6		1	3	3	1		1				17
21.09.2023	12		4			4		1	1	2				11
27.09.2023	7	1	1			2	1	1				1		9
